

# பாக்கியம்

## திரு. கணபதிப்பிள்ளை பாக்கியராசா (மாலி)

அவர்களின் 70வது அகவை பூர்த்தி

# விழா மலர்




வெளியீடு

அல்வாயூர்க் கவிஞர் நாடக மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்கியம்

பாராட்டுவிழாக் காணும்

கலைஞர்

கணபதிப்பிள்ளை பாக்கியராசா (மாலி)

பாராட்டு விழா மலர்

வெளியீடு

அல்வாயூர்க் கவிஞர் நாடக மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் :- கலைஞர் கணபதிப்பிள்ளை பாக்கியராசா
பாராட்டுவிழா மலர்

வெளியீடு:- அல்வாயூர்க் கவிஞர் நாடக மன்றம்

உரிமை :- சதாசிவம் ஈஸ்வரன்

காலம் :- 05.12.2010.

பக்கம் :- 50

பதிப்பு :- மதுரன் கிரா(f)பிக்ஸ் & ஒவ்செற் பிறின்ரேர்ஸ்
அல்வாய். - 021 226 3099, 0776688318.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...

01. ஆசிச் செய்தி

சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்

02. வாழ்த்துச் செய்தி

கலாநிதி த.கலாமணி

வல்வை ஒன்றிய உபதலைவர் மு..தங்கவேல்

நாடகக் கலைஞர்.மா.அனந்தராசன் J.P

தி.செல்வநாதன்-தலைவர் அல்.சா.பிள்ளையார்

ந.துரைராசா-தலைவர், மனோகரா ச.ச.நிலையம்

Dr.து.இராஜவேல்-தலைவர் சா.பி..இ.இ.மன்றம்

சி.நிமலன் தலைவர்,கி.அபிவிருத்திச்சங்கம்,

03. கவிதைகள்

அல்வாயூர் கவிஞர் சிவநாமம் சிவனேசன்

சாதனா அகிலேஸ்வரன்

கவிஞர் வதிரி கண.எதிர்வீரசிங்கம்

கவிஞர் சிவ.கணேசன்

கவிஞர் வதிரி.சி.இரவீந்திரன்

அல்வாயூர் கே.ஆர்.திருத்துவராசா

தம்பி அச்சியன்

04. கட்டுரைகள்

நா.சந்திரசேகரம் (ஓய்வுபெற்ற அதிபர்)

செ.சதானந்தன் J.P (ஓய்வுபெற்ற அதிபர்)

கி.கணேசன் (ஓய்வுபெற்ற அதிபர்)

05. நேர்காணல்

சீ.சாந்தநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

கணபதிப்பிள்ளை பாக்கியராசா அவர்கள் 70வது வயது நிறைவையொட்டி அல்வாய் கவிஞர் நாடக மன்றம் எடுக்கும் விழா நிறைவுடன் சிறப்புடன் நடைபெற எமது ஆலடி ஐங்கரன் கூர் விழி அருட்பார்வை கிட்ட வேண்டுமென்றும் எமது அன்னை ஸ்ரீ பத்திரகாளி திருவருள் நல்கவேண்டும் என்றும் நிதமும் பணிகின்றோம். கலைவாழ்வு, தேவார திருவாசக திவ்வியபிரபந்த ஓதுவார் நிலை, இடையறா அன்பு, இறைதொண்டு சிறந்து அர்ப்பணிப்புடன் இவர் செய்யும் அனைத்து சேவையும் நிலைபெறவேண்டுமென்றும் ஆசியும் வாழ்த்தும் கூறுவதில் மன மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது ஆலயத்தில் முகாமையாளராக இருந்து ஆற்றிய சிறந்த சேவை ஊர் அறிந்த விடையம். கோவிலில் அவரின் திருமுறை பாராயணம், விரத அனுஷ்டானம் எல்லாம் சிறந்து ஓங்க வேண்டும். அதற்கு ஆலடி ஐங்கரப்பெருமான் பூரண அருள் கிட்டவேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

**சிவஸ்ரீ. தியாக. சோமஸ்கந்தராஜாக் குருக்கள்**
B.A.Dip-in-Ed, M.A, Principal.
*நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலயம்*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பல்லாண்டு வாழ்க!**

இன்று எழுபத்தோராவது அகவையில் திரு.பாக்கியராஜா அவர்கள் காலடி எடுத்துவைக்கிறார் என்ற செய்தி மகிழ்ச்சி தருகின்றது. அல்வாய்க்கிராம மண்ணின் மைந்தர் இவர். எமது கிராமத்தின் எழுச்சியிலும் விருத்தியிலும் உணர்வு பூர்வமாகப் பங்குகொண்ட இவர், பங்கு பற்றுக்கான தனது ஆர்வத்தை இன்றும் வெளிப்படுத்திவருபவர்.

எமது கிராமத்தின் உயிர்ப்பு மிக்க நிறுவனங்களாகத் திகழும் ஆலயபரிபாலனசபை, சனசமூகநிலையம், விளையாட்டுக்கழகம் போன்றவற்றில் அதிக பங்களிப்புகளைச் செய்து வந்த திரு. பாக்கியராஜா, குறிப்பாக உதைபந்தாட்டத்தில் முத்திரைபதித்தவர். அந்நாளில் இவரின் ஆட்டச்சிறப்பு இன்றும் எம் கண்முன் நிற்பது

திரு பாக்கியராஜா அவர்கள் எமது ஆலயத்தில் திருமுறை ஓதும்போது, இவரின் தந்தையாரான திரு.ஆ.கணபதிப்பிள்ளை அவர்களே எமக்கு நினைவுக்கு வருவார். உருகி உருகிப் பஞ்சபுராணம் பாடி இறைவனைப் பணிந்தவர் அவர். தந்தையாரின் வழியில் தனயனான இவரும் இன்றும் இறைவனைப் பாடிப்பரவி வருகிறார். இவர் இறையருளால் நிறைந்த ஆரோக்கியம் பெற்று இன்னும் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி த.கலாமணி**
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*கல்வியியற் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

***கணபதிப்பிள்ளை பாக்கியராசா***

இவரை 1960ம் ஆண்டிலிருந்து நான் நன்கு அறிவேன். இவரை செல்லமாக மாலி என்று அழைப்பார்கள். இவர் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக வீரர். இவர் மைதானத்தில் விளையாடும் பொழுது பந்தை மிகவும் அழகாக விளையாடுவார். இவர் பின்னாலிருக்கும் பந்தை வளைத்து அடுத்தவர் பக்கத்திற்கு அடிப்பதில மிகவும் வல்லவர். மைதானத்தில் விளையாடும்போது தவறாக ஒரு போதும் இவர் விளையாடுவதில்லை. உதைபந்தாட்டத்தை பொறுத்தவரை இவர் மிகவும் திறைமைசாலி. இவரின் விளையாட்டை ரசிப்பதற்கு உதைபந்தாட்ட மைதானத்தில் இவருக்கென்று தனிப்பட்ட ரசிகர்கள் ஏராளம். இவர் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்திற்காக தனது முழுமூச்சுடன் திறம்பட விளையாடி வந்துள்ளார். இவர் நீண்ட ஆயுளும் சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**மு.தங்கவேல்**
***வல்வை ஒன்றிய உப தலைவர்***
***வல்வை வி. க. முன்னாள் தலைவர்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகவை 70ல் பாராட்டுவிழாக் காணும்**
**எம்மூத்த உறுப்பினர் திரு.க. பாக்கியராசனே**
**உம்மை வணங்குகிறோம்; ஐயா.**

உலகறிந்த விளையாட்டு வீரன் நீ, அற்புதமான கட்டடக்கலைஞன் நீ, தொட்டதெல்லாம் துலங்கிடச் செய்யும் ராசிக்காரன் நீ, ஆலயத்தொண்டனாய் அரும்பணிகள் செய்பவன் நீ, ஓதுவாரென பெயரெடுத்தவன் நீ, பொது ஸ்தாபனங்களில் சிறந்த சேவகன் நீ, எமது மன்றம் சிறக்க நல்ல ஆலோசனைகள் தருபவன் நீ, உடல் பொருள் யாவும் ஈய்ந்து மன்றப்பணி செய்தவன் நீ, அல்வாயூர்க்கவிஞர் செல்லையா அரங்கை அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோவில் வளவில் அமைக்க அரும்பாடு பட்டவன் நீ.

இன்று உன் பிறந்தநாளில் உன் அரும்பணிகளை மனத்திருத்தி கரம் கூப்பி வணங்குகிறோம்.

அத்துடன் இவ்வினிய நன் நாளில் எல்லாம் வல்ல எம் ஆலடி ஐங்கரன் உங்களுக்கு நீண்ட ஆயுளையும் சுகத்தையும் செல்வங்களையும் அள்ளித் தரவேண்டும் என மனதாரப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க பல்லாண்டு வாழி... வாழி

*கவிஞர் நாடக மன்றத்தின் சார்பில்*
**நாடகக் கலைஞர் மா அனந்தராசன்** J.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

அகவை எழுபத்தொன்றில் காலடி பதிக்கும் எங்கள் பாக்கியராசாவுக்குப் பாராட்டுவிழா எடுப்பதில், அகம் மகிழ்ந்து வாழ்த்துவதில் பெருமைப்படுகின்றேன். சைவசமய நெறிநின்று வாழ்பவர். எமது கிராமத்தின் பெருமைக்கும் மகிமைக்கும் ஊற்றாய்த் திகழ்வது எமது ஆலயமாகும். இந்த ஆலயத்தின் சகல நிகழ்வுகளிலும் கலந்துகொள்வதுடன் ஆலயத்திருத்தொண்டுகளில் எல்லாம் தலைமகனாய்த் திகழ்பவர்.

திரு.பாக்கியராசா அவர்கள் தமது குடும்பப் பாரம்பரியத்தின் அனுட்டானங்களையெல்லாம் தவறாது கடைப்பிடித்து வருவதனால் அவரது ஆலய வழிபாட்டில் பல திருத்தலங்கள் சென்று பாடிப்பரவி வருவது வழமை. இவருக்கு தமது வழிபடு குலதெய்வமாகக் கருதிய மாலிசந்திப் பிள்ளையாரை அடையாளப்படுத்தி இட்ட 'மாலி' என்ற பெயரே நிலைத்துவிட்டது.

எமது ஆலயமாகிய அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் கோவில் பரிபாலனசபையின் இன்றைய மூன்றாம் திருவிழாவின் தானேஸ்வரராக இருந்துகொண்டு, தமக்குரியவிழா நிகழ்வுகளை அவற்றின் பங்காளிகளுடன் மேற்கொண்டு வழிநடாத்தி வருவது அவருடைய சிறந்த சமயப் பண்பாட்டின் அடையாளமாகும். இவற்றைத் தொடர்ந்தும் பின்பற்றி 'மாலி' அவர்கள் எமது ஆலயத்தின் கட்டமைப்பினைப் பேணி நீண்ட காலம் வாழவேண்டும் என எமது பாலகணபதி திருவருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**தி.செல்வநாதன்**

***தலைவர், அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் கோவில்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

ஒரு கிராமத்திற்குப் பெருமை சேர்க்கும் துறைகளில் ஆன்மீகம், கல்வி, விளையாட்டு ஆகியவை முன்நிற்கின்றன. ஆன்மீக உணர்வு உள்ள கிராமங்களிலேதான் கல்வியறிவுள்ளவர்கள் உருவாகின்றனர். ஆன்மீகம், கல்வி ஆகிய இரு துறைகளும் அந்தந்தக் கிராமத்துடனேயே நிறைந்துகொள்ள, விளையாட்டுத்துறை மட்டுமே பல கிராமங்களை ஒன்றுடனொன்று இணைக்கின்ற, தொடர்பு படுத்துகின்ற துறையாக விளங்குகின்றது. விளையாட்டுத் துறையின் விருத்திக்கு சனசமூக நிலையங்களே பெரும்பங்கு வகிக்கின்றன. அந்தவகையில் அல்வாய் கிராமத்தின் பெயரை வடமராட்சியில் முத்திரை பதிக்கும் விளையாட்டுக் கழகமாக எமது மனோகரா விளையாட்டுக் கழகம் அமைகின்றது என்றால் மிகையாகாது. விளையாட்டுக் கழகத்தின் புகழுக்கும், மனோகரா சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கும் முன்னோர்கள் ஆற்றிய பங்களிப்பினை நாம் மறந்துவிடமுடியாது.

எமது கழகத்தின் வளர்ச்சிப்பாதைக்கு வழிசமைத்தவர்களில் முக்கியமானவர்களாகக் கருதப்படுபவர்களில் திரு.க.பாக்கியராசா அவர்களும் ஒருவராவார். எமது சனசமூகநிலையத்தின் தலைவராகவும் நிர்வாக உறுப்பினராகவும் சிறப்பாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக மனோகரா விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட வீரராக மட்டுமன்றி உதைபந்தாட்ட அணியின் தலைவராகவும் செயற்பட்டு கழகம் பல வெற்றிகளைப் பெறுவதற்கும் பலராலும் பாராட்டப்படுவதற்கும் உரியவராக அவர் விளங்கியுள்ளார். அதுமட்டுமல்ல வளர்ந்துவரும் இளம் வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதிலும் சிறந்த பயிற்றுனராக இருந்துள்ளார். அவர் விளையாடும்போது விளையாட்டின் நட்பங்களை மிக நுணுக்கமாகக் கையாளக்கூடியவராகவும் சகவீரர்களுடன் நல்லுறவைப் பேணி ஒன்றிணைந்து விளையாடும் ஒரு சிறந்த வீரனாகவும் எல்லோராலும் மதிக்கப்பட்டவராவார்.

அவரது 70வது வயதிலே, அவரைக் கௌரவிக்கும் இன்றைய நன்னாளிலே அவரை மனோகரா சனசமூக நிலையம் சார்பில் பாராட்டி வாழ்த்துவதோடும் அவர் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப்பெற்று மேலும் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றேன்.

-ந.துரைராஜா *J.P*
தலைவர்
மனோகரா ச.ச.நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

அகவை எழுபத்தொன்றில் காலடிபதிக்கும் மாலி என்று அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை பாக்கியராசா அவர்களுக்கு இந்து இளைஞர் மன்ற தலைவர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உளக்கழிப்படைகிறேன்.

அல்வாய் ஆலடி ஐங்கரன் அருளால் பெருமை பல நிறைந்து விளங்கும் பாக்கியராசா அவர்கள் அல்வாய் கிராமத்தில் பிறந்து வளர்ந்து அல்வாய் மனோகரா விளையாட்டு கழகத்திற்கு ஆரம்பகால ஒரு சிறந்த விளையாட்டு வீரனாக திகழ்ந்து கழகத்தை சிறப்பித்தார். இது மட்டும் அல்லாது சிறந்ததொரு கட்டிடக்கலைஞராக சிறந்து விளங்கிக் கொண்டிருக்கும் இவர் தற்போது நம் கண்முன் ஆலய ஆன்மீக இறைபணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார். விழாக் காலங்களில் பஞ்சபுராணம், பிள்ளையார் கதை, திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப் பாடல் திருவாசக முற்றோதல் போன்ற பாடல்களை இறைவனுக்கு பாமாலையாக பாடிவருகின்றார்.

இவருடைய இறைபணி மேலும் தொடர, பல ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ எல்லாம் வல்ல ஆலடி ஐங்கரனை வேண்டி இந்து இளைஞர் மன்றம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

Dr. துரைராசா இராஜவேல்
*தலைவர்,சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோவில்.*
*இந்து இளைஞர் மன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

மனித வாழ்வியல் மேம்பாட்டிற்கு உடல், உள ஆரோக்கியம் அவசியமாகின்றது. அப்போதுதான் வாழ்வு சீர்மை பெறுகின்றது. பவளவிழா நாயகன் திரு.க. பாக்கியராசா அவர்கள் அதனை வெகுவாக உணர்ந்தவராவார். உள ரீதியான மேம்பாட்டிற்கு நிலைக்களனாக அமைவது ஆன்மீகமாகும். அதனைத் தன் வாழ்வின் அடி நாதமாகக் கொண்டவர். ஆலயம் சார்பான அனைத்துப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி ஏனையவர்களிற்கு வழிகாட்டியாக திகழ்பவர்.

உடல் ஆரோக்கியத்திலும் கரிசனை உடையவராக விளங்கி உடலை ஒரு கோவிலாக மதித்துச் செயற்படுபவர். தனது இளவயதில் விளையாட்டுத்துறையில் பல சாதனை படைத்தவராவார். குறிப்பாக உதைபந்தாட்டத்தில் பல சிறப்பான இடத்தை வகித்தவர். தனது அனுபவ வாயிலாக இளைய சமுதாயத்திற்கு அதில் பல ஆலோசனை வழங்குபவராகவும் காணப்படுகின்றார்.

ஒரு நேர்த்தியான கட்டடக்கலைஞராக காணப்படுமிவர் தனது தொழில் நுணுக்கங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவர்களுக்கு ஒரு அகராதியாக திகழ்பவர். எமது கிராமத்தின் வளர்ச்சியில் பல்வேறு வழிகளிலும் பங்காற்றி பொது நலனில் அக்கறை உடையவராக திகழ்பவர். அவரது நற்பண்புகள் நிமிர்த்தம் அனைவரும் அவரோடு அன்பாக பழகுவதற்கு பேறுடையவர்களாகின்றனர்.

பவளவிழாக் காணும் நாயகனை எமது சங்கம் சார்பாக மனதார வாழ்த்துவதோடு அவரது பணி மென்மேலும் சிறப்புறவும் நீடுழி வாழவும் எல்லாம் வல்ல ஆலடி ஐங்கரனை பிரார்த்திக்கின்றேன்.

திரு.சி. நிமலன்,
*தலைவர்,*
*கிராம அபிவிருத்திச் சங்கம்,*
*அல்வாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பாக்கியராசனின் அகவை எழுபது பூர்த்திவிழா வாழ்த்து மடல்

அகவை எழுபதினை அணிகொள்ளும் பேறுபெற்று
அகமகிழ் விழாவிதன் அரங்குகாண் - புகழோங்கு
அல்வையூர் மேவும் அருங்குணன் பாக்கியராசன்
நலம்பெற ஆலடியான் நல்கவேயருள்

மாலிசந்திப் பிள்ளையார் அருள் மேவு
வரச்சிறப்பால் வந்துதித்த பிள்ளையென
சீலம் பெற பெற்றவரால் விளங்குபெயராக
செல்லம்மிக மாலியென்று வண்ணம் பெற
ஆலடியான் கிருபா கடாட்சத்தால்
அகவை எழுபதை எட்டியின்று
அல்வை ஊரகத்தார் வாழ்த்துப்பாடும்
அண்ணலே சௌபாக்கிய ராசனே!
உன்துணையாளொடும், உறவோடும், ஊரோடும்
என்றும் பல்லாண்டு வாழி, மாலியென்றே
எல்லாம் வல்ல இறையோனை வேண்டி
வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம்

பக்தி நெறியோடு வாழும் பிள்ளையே
பரம்பொருளை பாடும் பணி மறவாப் பிள்ளையே
திக்கு நிறை கோவிலெலாம் தொழுகை ஆளும் பிள்ளையே
பக்குவம் நிறைந்தாய் பண்பினிலே
பலர் போற்றும் பாக்கியம் பெற்றாய் அன்பினிலே
எக்காலமும் ஊர்மறவா நிலைபெற்றாய் பணிகளிலே
தக்கவரம் இறைவன் தந்தவரம் நீயென்றே
சொந்தம் பாடும் மூத்த நிலையாளனே
சிந்தை பொங்க உன்னை
வாழ்த்துகிறோம்.

தன்நலம் பேணாது ஊர் சொந்தம்
திண்ணம் பெற வாழ்தலை பேணும்
எண்ணம் நிறைந்த நற்குணனே!
கண்ணில் காண்பவரை வசீகரம்
கொள்ளும் கறையில்லா முகத்தவனே!
இன்னா செய்தாரையும் மன்னித்து
இன்முகம் காட்டும் பண்புடையோனே!
என்ன வானாலும் ஊர் கொள்ளும் மரியாதை
என்றும் மதிப்பிழக்கக் கூடாதென
முன்னவனாகி கால் வைக்கும் வீரத்திறன்
விளங்கும் வழிகொள் வழியாக
மனத்திடம் கொண்டு வாழ்பவனே!
மாலி ! நீ வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்கு நீண்டவர் போக்கினை மாற்றிடும்
நல்ல பொறுமை பூத்திடும் பெருமகனே!
ஆக்கும் காரியம் எதிலும் முன்னணி
கொள்ளும் நிறைமுகப் பூரணனே!
நோக்கும் ஊர் முகம் கோணது நோக்கும்
மீக்குயர்வு மேவும் மாலி அண்ணாவே!
கேட்கிறோம் வரமாக ஆலடியானை
எங்கள் அகவையில் ஒவ்வொன்றை எடுத்து
கூட்டிக் கொடுத்திடப்பா எமதண்ணனுக்கே
நீடு நாள் வாழ்கவே!

*ஆக்கம்*
சிவநாமம் சிவநேசன்
*"எழில் வானம்"*
*கவிரூர் செல்லையா வீதி,*
*அல்வாய் வடமேற்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம்

## எங்கள் மாமாவே! வாழி நீடூழி

பாசம் நேசம் காட்டியெம்மை - தினம்
பண்பினை ஊட்டும் மாமாவே!
ஆசை முத்தம் நாளும் தந்து - எங்கள்
கவலை போக்கும் மாமாவே!

மாதா பிதா குருவுமாகி - நல்
அறிவு புகட்டும் மாமாவே!
நீதான் எங்கள் தெய்வமென்று - என்றும்
போற்றிப் பாடுவோம் உன் புகழே!

அன்பினைக் காட்டும் பண்பினில் - அன்னை
தந்தையைமேவி உயர்ந்தவரே!
அன்பினை உருக்கி உழைத்தென்றும் - எங்கள்
உயிர்ப்புக்கு ஈவதை மறப்போமா!

பார்வதி ஆச்சிதந்த பொக்கிஷமே - நாங்கள்
கட்டிக் காக்கும் பெருஞ் சொத்தே!
யாருமில்லை உனக்கு நிகரே - எங்கள்
வாழ்வில் முன்னிருக்கும் நிறைகுடமே!

அழுதிடும் எங்கள் முகங்கண்டு - அணைத்து
ஆறுதல் அளிக்கும் மாமாவே!
எழுபது வயதைத் தாண்டியும் -பல
எழுபது கண்டு வாழியவே!

எங்கள் வீட்டுச் சூரியனே - அன்பு
ஒளியைச் சிந்தும் சந்திரனே!
சிங்கம் போன்ற வீரியனே - எங்கள்
நிழலாகி என்றும் வாழ்வாயே!

**சாதனா. அகிலேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக்கிய ராசனெனும் பாங்குயர் நாமம்

திகழ்ந்திடு செல்வமொடு தித்திக்கும் விளையாட்டால் புகழுடைய
செம்மலே பூரணனே! ~ உகந்ததே
அல்வாயும் அவர்தம் ஆசிகளும் நினைச்சேர
நல்வாயால் வாழ்த்துகிறோம்! நயந்து!

பாக்கிய ராசனெனும் பாங்குயர் நாமமதால்
தேக்கியே பெருமைகளை தந்தவேனே ! ~ ஊக்கமுடன்
ஓய்வின்றி உழைப்பவனே உதாரண புருஷரே!
வாய்விட்டு சொல்கிறோம்! வாழ்த்து!

மடத்துக் கடவையிலே பெருமரமாய் நிழல்தந்த
மதிப்பார்ந்த மாணிக்க வாத்தியாரின் முற்றத்திலே
தடம் பதித்த மாணவர்களில் நீயுமொரு ஒளிவிளக்கு !
தரணிபுகழ அவர்தந்த ஆசிகளும் என்றுமுண்டு!

திடமுடனே அவர்வழி வந்துதித்த அனைவருமே
தக்கதொரு பாதையிலே முன்னேறி வளர்ந்தனரே!
கடமைகளில் கண்ணான உன்னுயர்வும் உலகறியும்
கர்மவீரனே எண்ணிலா புகழுடையோனே! வாழிவாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம்

தந்தையின் வழிகளிலே ஆன்மீக ஈடேற்றம்
தரமான கல்விக்கு சிறியதந்தை பெருமூக்கம்
விந்தையிலே உதைபந்தாட்ட நுணுக்கங்கள் அத்துப்படி
வீரனிவனென்று எதிரிகளும் புகழ்ந்திடும் ஏணிப்படி.

சொந்தமென மனோகராவை என்றுமே சொல்பவன்
சொத்தாம் அல்வாயூர் கவிஞரின் பேறாமகன்
தந்தவனே! பலவெற்றிகள் பதக்கங்கள் கேடயங்கள்
தருகின்றோம்! ஊர்கூடி பலகோடி வாழ்த்துக்கள்!

**கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்**
***யாவத்தை.***
***வதிரி***
***28. 11. 2010.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகினைக் காட்டியவனே ஆண்டுபல வாழியவே!

சீர்பெருகு விளையாட்டிலும் சிறப்பான கட்டடகலையிலும்
பார்ப்போரை கவர்ந்திடும் பாக்கியவானே! ~ ஊர்ப்பெயரை
உலகறியச் செய்திட்ட ஊரபிமானியே உத்தமனே
நலமோடு வாழியவே நாளும்!

பக்திமான் பண்ணிசைத்து பாடுவதில் 'ஓதுவார்'
எக்கணமும் விளையாட்டிலும் அன்புடையான்! ~ எக்காலமும்
நல்மகவாய் திகழ்ந்திடும் நமதன்பு பாக்கியராஜா
அல்வாயின் சேயென் றறி!

பந்துதனை பின்னங் கால்களினால் முன்னோக்கி
பறவையை போல நீயும் பறந்தடிக்கும் அழகேயழகு!
விந்தைகள் உண்டுன் கரங்களிலும்! கரப்பந்தாட்ட
விளையாட்டும் காட்டிடுமே தனித்துவமான அழகேயழகு!

பந்தமொன்று தோன்றிடவே மாடிமனை கட்டடங்களில்
பதிக்கின்றவுன் நுட்பங்களின் வெளிப்பாடும் அழகே யழகு!
நொந்துவரு மடியவர்கள் மனங்களிலே தெளிவுகாணவே
நல்லிசை கொண்டுநீயும் பண்ணிசைக்கும் அழகேயழகு!

**கவிஞர் சிவ கணேசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலிக்கு ஒரு பாராட்டு

கல்வி கலை, இலக்கியம் விளையாட்டில்
அல்வாய் எனும் ஊர்
இத்தரையில் முத்திரை பதித்த ஊர்
வல்லவர்கள் பலர் விளையாட்டால்
அல்வாயிலும் புகழே பெற்றார்

அல்வாய் என்றவுடன் எம் நாவில்
அல்வாய் செல்லையா வருவது போல்
உதைபந்தென்றவுடன் உற்சாகமாய்
அல்வாய் பெயருடன் அடுத்து வருவது
அல்வாய் மாலி எனும் அழகான பெயரதேதான்!
மாலி என்ற பெயரை நான்
மறவாது கேட்டது ஆண்டு
அறுபத்திரண்டில் தான்!
இன்று இவ் வீரனுக்கு அகவை எழுபதாம்
ஆச்சாரியமாக இருக்கிறது. அறுபது கடந்திருக்கும்
ஆனாலும் எழுபது என எண்ணமுடியாது.
இன்னும் இனிய தேகாரோக்கியம் இவருக்கு,
இவர் உள்ளம் இனிமையானதனால்
எல்லோர்க்கும் இனியவராகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றடிக்கும், கை கால் குளிரெடுக்கும்
மாரிகாலத்தில் மழை கூட வரும் ஆனாலும்
ரசிகர் கூட்டம் மனோகரா மைதானத்தில்...!
சின்னப்பையன் நான் என் மாமாவுடன்
சித்திராபூரணையின் சிறந்த உதைபந்தாட்டம் காண
மைதானத்தில் மக்கள் கூட்டத்துள் நிற்பேன்
மடத்துக் கடவையின் மாலி விளையாட நின்றால்
மகிழ்ச்சி பொங்கி நிற்கும்
இவரின் (style) அழகு ஆட்டம் காண
ஆர்ப்பரித்து நிற்போம்
பந்தை எடுப்பதுவும் பல சுற்று வெட்டு
வெட்டி எடுப்பதுவும், பக்குவமாய்
தன்னணிக்கு பந்தை ஊட்டுவதும்,
முன்னணியின் வீரர்கள் வன்னி, பேரின்பம்
Dr.சாம்பசிவம், இரத்தினராசா, வீரராசா என்போர்
கோல் வலயம் நோக்கி ஓடுவதும்
காண ஒரு காட்சியாகும்.

மத்திய வீரனாக மகிழ்வாய்
எக்கணமும் காணும் இவர்.
நேரடிகள் தொடுக்கும் போது
சற்று குனிந்து சரிந்து நின்று
மெல்லக்கையுயர்த்தி தன்பலத்தால்
மேவி பந்தை உதைக்க
கூவிப்பந்து இவர் குழுவிடம்
நாடிச் செல்ல நற்பயன் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>பாக்கியம்</u>

விளையாட்டின் தனித்துவங்கள்
விளைந்து இவரிடம் இருந்தது
வளைந்து குதிக்காலால் பந்தடித்து
முன்நோக்கி பந்தை பாயவைப்பார்.
தன் காலால் மற்றையோரை
தட்டி விழுத்தாதவர்.
படுத்திருந்து பக்குவமாய் - தன்
கால் வளைத்து பந்தடிப்போன்!
இவர் போல இன்னொருவர்
இப்படி பந்தடிப்பதை
இற்றைவரை நான் பார்க்கவில்லை.
தண்டனை பந்தடிக்க
தகுதியானவர்களுள் ஒருவரிவர்
முன்னணி வீரனாயும்
பின்னணி விரனாயும் எந்நிலை சார்ந்தும்
விளையாடும் வீரர்களுள்
மாலியும் ஒருவராவார்.

கல்விக்கும் விளையாட்டிற்குமாய்
கல்லூரிகள் சில கண்டவராம்
தேவரையாளி இந்துவில் இவர்
திறன் விரிந்து பின் திரு
இருதயக் கல்லூரியிலும் சேர்ந்து
உதைபந்தாட்ட அணியின் படத்தில்
கமலாகரன் சதானந்தன் உடன்
கண்டு மகிழ்வடைந்தேன்
விக்னேஸ் வராவினிலும் விரும்பி
இவர் படித்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியையும் தோல்வியையும்
வெகுநிதானமாக நோக்குவோன்
தன்னணிக்காக தயக்கமின்றி இயங்குமிவர்
மைதானப் பண்புகளை மதித்து நடப்பவர்

எண்பத்தைந்தில் ஒருநாள்
என் ஆசான் அமரர் இரத்தினசிங்கத்திடம்
உரையாடும் வேளை
தங்களின் பயிற்றுவிப்பில்
தங்களை கவர்ந்தோர்
யாரெனெக் கேட்டேன்?
மாலி, சாந்தம், பீற்றர்
எனப் பகர்ந்தார்.
அக்கருத்தை எண்ணி
இன்றும் மகிழ்கிறேன்.

மாலிக்கு விழா வெடுத்தல்
மகிழ்வான செய்தி
அல்வாய் மனோகராவின்
உன்னத வீரனுக்கு
கிடைக்கின்ற பெரும் கௌரவம்!

இவ்விழா காண்பதால்
எங்கள் மாலி எனும் வீரன்
பெரும் பாக்கியம் பெறுகின்றார்
பாக்கிய ராசாவாகின்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம்

மாலி எனும் பாக்கியராசா வீரன்
மாலிசந்தி பிள்ளையாரின் அருளுடனும்
ஆலடியின் ஐங்கரனின் அருளும் பெற்று
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

**வதிரி சி. ரவீந்திரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணிசை போற்றும் புண்ணியனே!

விழுதுள ஆல்நிழல் விநாயகர் துதிகொளும்
பொழுதெலாம் பணியே பெரிதென - எழும்போது
செழுமையுறு அல்வாயூர் சேய்பாக்கிய ராஜா
ஒழுகிடும் பண்பே அழகு!

பெற்றவர் காட்டிய போற்றிடும் பாதையில்
பற்றொடு பாதங்கள் பதித்தெழும் பாங்கு
அற்புத மானதோர் அருங்கலை யாளன்
இற்றரை போற்றும் பாக்கிய ராஜா
சற்றுமே தளர்விலா சாஸ்திர பணிகள்
சுற்றமும் சூழவே சேர்ந்துமே நிற்பார்
மாற்றிடை குறைவிலா தங்கமு மானவர்
மாலி அண்ணாவை மனமார வாழ்த்துவோமே.

பல்முகம் மிக்கதோர் புகழ் பெறு மாணவர்
பண்ணிசை யோடிவர் பாடிட எழுபவர்
வல்லமை மிக்கதோர் அணித்தலை மகனிவர்
வித்தக கலைஞனாய் எமக்கிவர் வாய்த்தவர்
நல்மனை அமைத்திட நல்மன தோடிவர்
நீண்முகன் துதியொடு நாவரை வாழ்த்துவர்
அல்வாயூர் எண்திசை எல்லைகள் அன்றியே
அனைத்துமூர் வாழ்த்துமே! அண்ணனே! நீடு வாழி!

*என்றும் அன்புடன்*
**அல்வையூர் கே.ஆர் திருத்துவராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அண்ணன்

*பாசம்...*

அன்புக்கும் மதிப்பிற்குமுரிய அண்ணனே
ஆலடியான் புகழ் பாடும் பக்தனே
வணங்குகின்றேன் உன்னை இன்று
வாழ்த்துகின்றேன் அகவை 70 நாள்தனில்

*வாழ்க்கை முறை...*

மகா பாரதத்தில் தர்மவழி நின்றவன் தர்மன்
மகா குடும்பத்தின் தர்மநெறி காப்பவன் அண்ணன்
மாலி அண்ணனே உன்வாழ்வியல் முறைகண்டு
மகா பாரதமும் உனை தலைவணங்கும்

*தொழில் மகிமை...*

எனை உணர்ந்த பருவத்தில் உனை உணர்ந்தேன்
உனை உணர்ந்த தனால் பாசத் தம்பியானேன்
ராஜ தாரகை என்னை உனக்கு தாசனாக்கியது
ராஜ முத்திரையை தொழிலில் பதித்தது அது உனக்கு

*ஆசை...*

எனக்கு ஒரு இல்லம் அமையும் காலம்
அண்ணன் கட்ட வேண்டும் என்பது கனவு
கனவு மெய்ப்பட்டது ஒக்ரோபர் 2010 -27 இல்
சீதா பவனும் உன் புகழை என்றும் பறை சாற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உதைபந்தாட்டம்...*

இருபது ஆண்டுகள் ஊரைப்பிரிந்து வாழ்ந்தவன்
சொன்னவார்த்தை மெய்சிலிர்க்க வைத்தது
மனோகரா மைதானத்தில் என் மகனுக்கு
மாலியண்ணை கால்கோள் செய்யவேண்டும் உதைபந்து

*உறவு...*

நான்மட்டும் உனை அண்ணனாக போற்றவில்லை
ராஜ தாரகையே உனை அண்ணனாக போற்றுகிறது
உணர்ந்திருப்பாய் சந்திரனின் அன்பில் நின்றுவிடவில்லை
என்குடும்பம் அழைக்கும் பெரியப்பா என்ற சொல்லில்

*வேண்டுதல்...*

நூறாண்டுகாலம் நீ ஓதவேண்டும் இறைபுராணம்
பல்லாயிரத்தாண்டு நீ பாடவேண்டும் ஆலடியான் புகழ்
நேர்மையும் சத்தியமும் தர்மமும் உனை உதாரணங்காட்ட
எங்கள் அண்ணன் வாழிய வாழிய நீடூழி வாழியவே

**அன்புத்தம்பி – அச்சியன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனை வீரன் மாலி

இவ்வுலகில் பல சாதனையாளர்கள் இலைமறைகாயாகத் தோன்றி மறைந்துள்ளார்கள் ஒருவர் வாழும் காலத்தில் அவரின் சாதனைகளை நாம் உணர்வதில்லை, வாழ்த்திப் போற்றுவதில்லை. இது நம்மிடையே உள்ள குறைபாடாகும். ஒருவர் புரியும் சாதனையை அவ்வப்போது ஏற்று போற்றுவதால் அவர்க்கு ஊக்கமும் உற்சாகமும் மேலிட, அவரின் செயற்பாடுகள் பிரமிக்கத்தக்க வகையில் அமையும்.

இதனை உணர்ந்த அல்வாய் "மனோகரா" சமூகம், இன்றைய கதாநாயகனான திரு.க.பாக்கியராசாவின் செயற்பாடுகளை மதித்து அவருக்கு பாராட்டு விழா எடுக்க வேண்டுமென நினைத்தமை பாராட்டுதற்குரியது.

மாலி என உரிமையோடும் பாசத்தோடும் அழைக்கப்படும் திரு. பாக்கியராசாவை மாணவப் பருவத்தில் நான் முதன்முதலில் உதை பந்தாட்ட மைதானத்தில் கண்டேன். அவருக்கே உரித்தான விளையாட்டு நுட்பங்களை அவர் மைதானத்தில் காட்டி, ஆடிய ஆட்டத்தில் வெற்றிக்காக மாத்திரம் ஆடாது நேர்மையான வழியிலே ஆடி மனோகராவுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்தமையை எதிரணி ரசிகர்கள் கூட பாராட்டியதனை நானறிவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 ல் கட்டடக்கலைஞர் மயிலப்பாவுடன் உதவியாளராக வந்த மாலி, இளமைத்துடிப்போடு செய்யும் தொழிலே தெய்வமெனக் கொண்டு உழைத்த பாங்கை அவதானித்து வியந்தேன். அவர் மேல் கொண்ட நம்பிக்கையால் அவரை ஒரு முழு மேசனாக்க வேண்டும் என விரும்பி எனது வீட்டைப் பொறுப்பேற்றுக் கட்டுமாறு கூறினேன். சற்று பின்வாங்கிய மாலிக்கு தென்பூட்டி உற்சாகப் படுத்தினேன். எனது வேலையைக் கன்னி முயற்சியாகக் கொண்டு பிறர் வியக்கும் விதத்தில் செய்து முடித்தார். இவரைப் பிரபல்யப்படுத்த வேண்டுமென விரும்பி தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை மேல்மாடிக்கட்டடம் கட்டுவதற்கு இவரை அணுகினேன்.

இதற்கு முன்பு மேல்மாடிக் கட்டிடம் கட்டி அனுபவமில்லை எனக் கூறி, தயங்கினார்மாலி. தைரிய மூட்டி "யாமிருக்கப் பயமேன்" என்றேன். தயக்கத்துடன் சம்மதித்தார். மாலி நினைத்தால் செய்துமுடிப்பார் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. கட்டட மாதிரி (Plan) படம் பெறப்பட்டு விளக்க மளிக்கப்பட்டது. திணைக்கள பொறியியலாளர் வியக்கும் வண்ணம் வேலைகள் நேர்த்தியாகவும் விரைவாகவும் முடிக்கப்பட்டன. மாலியின் ஆற்றலை வியந்த தொழில் நுட்பவியலாளர்கள் வடமராட்சியில் முடிக்கப்படாதிருந்த மேல்மாடிக்கட்டட வேலைகளை முடிப்பதற்கு இவரை நாடி வந்தார்கள். இது எனக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையாளித்தது. மாலி வடமராட்சியில் பிரபல்யமானார்.

எழுபது வயதிலும் செய்யும் தொழிலே தெய்வம் எனக்கருதும் பாக்கியராசா வாழ்நாளில் ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்க்கு வேலையாய்ப்பளித்து வளர்த்தெடுத்தமை பாராட்டுத்குரியது. அவர் தனது உதவியாளர்களை கூலியாளாகக் கருதாது தனது சகபாடிகளாகவே கருதி வந்தார். இதனால் அவரின் இன்பதுன்பங்களில் எல்லாம் அவர்கள் பங்கேற்பதனை காணக்கூயதா யிருக்கின்றது. உதவியாளர்கள்மேல் பற்றும் பாசமும் நேசமும் கொண்டு வாழ்ந்ததே இன்றைய இந் நிகழ்வுக்குக் காலாயின.

பிழையினைப் பிழையென்றே அஞ்சாமல் எவர் மத்தியிலும் இடித்துரைக்கும் தைரியம் மாலிக்கே உரியது. பெரியாரிடத்தில் அன்பு நேசம் இரக்க சுபாவம் மேலிடப் பெற்ற மாலி உறவுகளைப் பேணும் தன்மையுடையவர்.

ஆன்மீகத்தில் அதி ஈடுபாடு கொண்டதனால் சாமணந்தறை விநாயகர்மேல் பெரும் பக்தி மிக்கவராகக் காணப்படுகின்றார். விநாயகரும் மனோகரா வாசிகசாலையும் நம் இளம் சந்ததியை வளர்த்தெடுக்கும் கண்கள் என்பார். எங்கு நல்லன நடக்கின்றனவோ அவற்றிற்கு தனது முழு ஆதரவினையும் நல்கும் நல்ல பண்பு இவரிடம் நிறைந்து காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள்காண் பதறிவு

எனும் வாக்கிற்கமைய ஒழுகும் மாலி ஒழுக்கத்தையும் உயிரிலும் மேலாக பேணும் தன்மையுடையவர்.

இவ்வித நற்பண்புகளை அணிகலன்களாக கொள்ளும் திரு பாக்கியராசவுக்கு பாராட்டு விழா எடுப்பது சாலச்சிறந்தது.

பாராட்டுக்குரிய திரு.பாக்கியராசா சீரும் சிறப்புடனும் வளமுடனும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன். பாராட்டு விழாக் குழுவினர்க்கு அவர்தம் நன்முயற்சிகட்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மனநிறைவு கொள்கின்றேன்.

நன்றி

**நா. சந்திரசேகரம்**
***ஓய்வு பெற்ற அதிபர்***
***அல்வாய்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக்கியம்

அகவை 70ல் பாராட்டுவிழாக் காணும் பேற்றுக்குரியவர் திரு.கணபதிப்பிள்ளை பாக்கியராசா அவர்கள் அல்வாய் மடத்துக் கடவையில் 01.12.1940ல் கணபதிப்பிள்ளை பார்வதி தம்பதியினருக்கு மூத்த புத்திரனும் அல்வாய் கொக்கட்டியாவளவு பொன்கதிர் இல்லத்து மீனாட்சியம்மாவை வாழ்க்கைத் துணையாகக் கொண்டவரும் ஆவர். இயற்பெயர் பாக்கியராசாவாகும். கல்வி கேள்விகளில் வல்லவன் நல்லதொரு கலை வித்தகன்.

இவருடைய தந்தையார் ஒரே தங்கையுடனும் தம்பியுடனும் கூடப்பிறந்தவர். அந்தக் காலக்கல்வியினூடாகவும் கேள்வியினூடகவும் புராணம், இதிகாசங்கள், திருமுறைகள் என்பவற்றை நன்கு அறிந்து கொண்டவர் என்பதனை அவருடன் பழகும் பொழுது அறியக்கிடந்தது. இத்தகைய கல்விப்பரிச்சயத்தினாலும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த் கவிஞர் செல்லையா, க. தா. மாணிக்கம் அதிபர் போன்றவர்களின் வழிநடத்தலில் தம்பியார் கதிரவேல் அவர்களை படிக்கவைத்து ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகக் கண்டவர். கதிரவேல் அவர்கள் கணபதிப்பிள்ளையவர்களுடைய குடும்பத்தில் மிகுந்த செல்லப்பிள்ளையாகவும் திகழ்ந்தமையால் குடும்பப்பாசம் காரணமாக 'பாக்கியம்' எனக்குறித்து மகிழ்ந்தனர். இதனடியாகவே தமது குடும்பத்தில் பிறந்த மூத்த புத்திரனுக்கும் பாக்கியராசா எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

பாக்கியராசா பாக்கியம் என்ற அடியாகவும் பெற்றோரது குலதெய்வ வழிபாடாக விளங்கிய மாலிசந்தைப்பிள்ளையார் மேல் கொண்ட பற்றுதல் காரணமாகவும் 'மாலி' என்ற இடுகுறிப்பெயருக்கும் உரியவரானதுடன் மற்றவர்களால் இன்றும் தெரிந்து கொள்ளக் கூடிய பெயராகவும் நிலைத்துவிட்டது. குடும்பத்தில் மகாமணிதேவி சதாசிவம், செல்வராசா, ஸ்ரீமணிதேவி சிவநேசன், மகேந்திரராசா(அப்பன்), விநாயகராசா ஆகியோரைச் சகோதரர்களாகவும் கொண்டிருந்தவர் விழா நாயகன் பாக்கியராசா(மாலி) அவர்களின் வாழ்க்கையினை அவருடைய சிறிய தந்தையாரான ஆறுமுகம் கதிரவேல் அவர்களையும் துணைவியார் தனலக்குமி அவர்களுடைய குடும்பத்தினரை விட்டுப்பார்க்க முடியாது. அந்தளவுக்கு பாக்கியராசா அவர்களின் நடையுடை, அவர்மேற்கொண்ட சமூக விழுமியங்கள் சமய ஈடுபாடுகள், தொண்டுகள் என அவையாவும் அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவேல் அவர்களின் குடும்பத்தினரிடமிருந்து பெற்றுக்கொண்டவராகவே இன்றும் விளங்குகிறார். அமரர் கதிரவேல் குடும்பத்தினரால் வளர்த்தெடுகப்பட்ட வர்களில் அவருடைய அதே வழியில் நின்று வாழ்பவர் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரியின் மகன் திரு. வே.க. தங்கவேல் என்பதுவும் குறிப்பிடக்கூடியதாகும். அமரர் கதிரவேல் அவர்களைவிட்டு மாலியை பிரித்து நோக்கமுடியாது. இதனால்தான் திரு. பாக்கியராசா தனது ஆரம்பக் கல்வியினை தேவரையாளி இந்துக்கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியினை வதிரி திருஇருதயக் கல்லூரியிலும், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். கனிஷ்ட கல்வித் தராதரப்பத்திரம் வரை ஆங்கில மொழி மூலம் கற்றமை (1955) குறிப்பிடக்கூடியதாகும். அதனாலேதான் இன்றும் அவரிடமிருந்து சரளமான ஆங்கில மொழியினை வாயால் கேட்கக்கூடியதாக இருப்பது கண்கூடு. பாடசாலைக் கல்வியினூடாகத் தன்னை மாணவப் பருவத்திலிருந்தே விளையாட்டுக் களிலும் தக்க திறமைகளை வளர்த்துக் கொண்டார். அவருடைய கட்டையான சற்று உள்வளைந்த அழகான தோற்றம். நுட்பமான புதுமையான ஆட்டமுறை அவருக்கெனத் தனியான ஒரு முத்திரையினைப் பதித்துள்ளமை உதைபந்தாட்டத் துறையில் அவருக்கென ஒரு ரசிகர் கூட்டத்தையும், பாணியினையும் ஏற்படுத்தியதெனலாம். மனோகரா விளையாட்டுக் கழகத்திலும் வெளிக்கழகங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட தொடர்புகள் அவரை ஒரு சிறந்த விளையாட்டுக் கலைஞராக்கியது எனலாம். தந்தையாரின் முதிர்வு, உடல் தளர்வு என்பவற்றால் மாலி பாடசாலைக் கல்வியினை இடைநிறுத்தி அன்றைய இலகுவான வருவாய்க்குரிய தொழில் துறையான கட்டடவேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதனையே இன்றுவரை எந்தவித சலிப்போ அசூசையோ இல்லாது தொழில்துறை சார்ந்த தலைமை மேசனாகவும், கலைநுட்பம் நிறைந்த ஒருவராகவும் திகழ்கின்றமை குறிப்பிடக்கூடியதாகும். இதனால் தனது தொழில் துறையிலும் சிறந்த ஒரு கலைஞனாக விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். மேசன் தொழிலை மாலி வேலை கொடுப்போருக்கும் வேலைகொள்வோருக்கும் பொய்யகல மேற் கொண்டமையினாலேயே சகலரும் தொழில் ரீதியாக அவரை நாடிவருவது கண்கூடு. தாரமும் குருவும் அவரவர் தலைவிதி என்ற கூற்றுக்கமைய மாலி இன்றும் தன் தொழில் சார்ந்த குருமாராக அல்வாயின் மூத்த கட்டடக் கலைஞர்களான மயிலப்பாவையும் (மயிலுமேசன்) மணியம் மாமா (வ.சுப்பிரமணியம்) ஆகியோரை தனது நன்றி மறவாத் தன்மையுடன் வெளிப்படுத்துவது கண்கூடு. இன்றும் தனது 70 வது வயதிலும் தொழில் செய்கிறார்.

மாலியின் இளமைக்காலம் (மாணவப்பருவம்) தொடக்கம் இன்றுவரை ஊருக்காகவும், சமூகமேம்பாட்டுக்காகவும் தொடர்புபட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் நிலமையினை 1960 - 2010 என வரையறை செய்யலாம். எமது ஊரில் நிலை கொண்டுள்ள ஆலயம், சனசமூகநிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் எனச் செயற்படும் நிறுவனங்களில் தனது சிறிய தந்தையாரின் வழித்தோன்றலாக நின்று பணியாற்றிவருகிறார். எமது கிராம பொது நிறுவனங்கள். ஆலயம் ஆகியவற்றுக்கு அவற்றின் வளர்ச்சிப் பாதையில் ஒரு வரலாறு உண்டு. எந்த விடயங்களுக்கும் ஆரம்பம், வளர்ச்சிக்குரிய காலம் தொடர் செயற்பாடுகள் என வகுத்துப்பார்க்கலாம் இவற்றுக்கு நாட்டு நிலைமைகள் அரசியல் போக்குகள் என காலரீதியான சாதக பாதகங்கள் ஏற்படுவதுண்டு. இந்நிலைமை எல்லாருக்கும் பொதுவானதுமாகும் இதனை விளங்கிக் கொள்ளாதவர்கள் சமூகத்தைப் புரிந்து கொள்ளாதவர்களாவர். இந்த நிலையில்தான் அமரர் கதிரவேல் அவர்களின் தலைமைத்துவத்தில் அவரின் நீண்ட காலச் செயற்பாடுகளில் மாலியின் பங்கு முக்கிய இடத்தை வகித்திருந்தது எனலாம். இளைஞர் சார்பாக ஏற்பட்ட சனசமூக அபிவிருத்தியில் மாலியும் ஒரு பங்காளியாக விளங்கியவர். 2000 - 2003 வரையான ஆலய மகா கும்பாபிஷேக ஏற்பாடுகளிலும் நிகழ்வுகளிலும் மாலியின் பங்கு காத்திரமானதாகும். எமது ஆலய பிள்ளையார்கதை, கந்தபுராணப்படிப்பு. திருவெம்பாவை திருவாசக முற்றோதல் நிகழ்வுகள். நவராத்திரி நிகழ்வுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகோற்சவ விழாக்கள் என விரிந்து போகும் ஆலய நிகழ்வுகளில் மாலி முக்கியமானவராகத் திகழ்பவர். அவருடைய திருமுறைப் பாராயணமும் சைவசமய அனுஷ்டானங்கள் அவரை முன்னிலைப்படுத்தும் நிகழ்வுகளாகும். அவரது திருமுறை அடங்கண் முறையில், மரண வீட்டிலும் அதனை உரியவாறு பாடுவதிலும் அதில் அவருடைய பங்களிப்பு காத்திரமாக இருக்கும். சைவ சமயத்தின் மகிமை கருதி தமது சிறிய தந்தையாருடன் ஈழத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமம், திருக்கேதீஸ்வரம் திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் ஆகிய தலங்களைத் தரிசித்து வந்த பேற்றுக்குரியவர். விரதத்தின் தன்மையினை மாலியிடமிருந்துதான் மற்றவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த அளவுக்கு மாலியின் மனிதநேயம் 1987 மேமாதம் வடமராட்சி லிபறேஷன் ஒப்பறேசன் நிகழ்வு - எமது கிராமத்தில் ஏற்படுத்திய மரண ஓலங்கள் பசி, பட்டினி?, காயப்பட்ட ஏதைகள், வாழ்வாதாரங்களை இழந்தவர்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் என மன உறுதியும் இறுக்கமும் என எமது ஆலயத்தில் ஒன்று திரண்டிருந்த மக்களுக்கு கூட்டுறவுச் சங்கம், சுகாதார நிலையம் எனத்தொழிற்பட்ட நிறுவனங்கள் மூலம் உதவும் ஏற்பாட்டுக்குழுவில் ஒரு சமூக சேவையாளனாக செயற்பாட்டாளராக விளங்கிய ஒரு தன்னல மற்றவராவார். இப்படியான ஒரு வாழ்வுக்குரியவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலி விளங்குவதனாலேயே, தான் புகுந்தவீட்டில் தனது தொழிற் தகைமைக்குரியவர்களாக தனது மைத்துனர்களான அகிலேஸ்வரன், சர்வேஸ்வரன் ஆகியோரை சிறந்த மேசன் தொழிலுக்குரியவர்களாக ஆக்கியுள்ளார். தன்னுடன் சேர்ந்து வாழும் அகிலேஸ்வரனின் குடும்பத்தின் அனுசரனையாளனாகவும் அதே பற்றுப்பாசத்துடன் த்னது சகோதரர்களின் பிள்ளைகளையும் பேணி உறவு கொண்டு விளங்குவது அவருடைய குடும்ப தலைமைத்துவத்தை வெளிப்படுத்துவதாகும். குடும்பத்தின் தலைமைத்துவத்தில் அவர்தான் தமது குடும்ப பாரம்பரியத்தை அவருடைய சிறு பாராயத்திலிருந்தே பேணியும் வாழ்வாதாரத்துக்கு வழிவகுத்தவர் என்பதனையும் அவருடைய சகோதரர்களால் நன்றி மறவாத் தன்மையுடன் வெளிப்படுத்தி வருவது உண்மையாகும்.

இன்று மாலி தன்னுடைய குடும்பத்தில் தம்பிமார்கள் மகேந்திரராசாவை ஒரு அரச சேவையில் பிரதம லிகிதராகவும். விநாயகராசாவையும் அரசவேலைக்குரியவராகவும் கண்டுள்ளார். தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களின் பிள்ளைகள் கல்வியில் பதவிகளில் உன்னதமானவர்களாக விளங்குவதைப் பார்த்து மகிழ்ந்து பாராட்டி வருகிறார். அகவை எழுபது வரை மனப்பூர்வமான பக்குவப்பட்ட ஒரு நல்ல வாழ்க்கையினை வாழ்ந்துவிட்ட மாலி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையின் பாரம்பரியத்தைக் கட்டிக்காத்து வந்த பெருமைக்குரியவராவர். இவற்றைக் கணித்தே இன்று அவரது உறவு சார்பான நிலையில் அல்வாயூர் கவிஞர் நாடக மன்றம் அன்னாருக்குப் பாராட்டுவிழா எடுத்து மகிழ்கிறது. இந்த விழாவினை அவர்கள் ஊர்சார்ந்த நிலையில் எடுப்பது மிகமிகப் பொருத்தமானது. மாலி இன்னும் பலகாலம் சுகபலத்துடன் குடும்பத்துடன் வாழ்ந்து பலருக்கு வாழ்வாதாரத்துக்குரிய தொழில்துறையை மேற்கொள்ள அருள் பாலிக்கவேண்டுமென அவர் வணங்கும் எல்லாம் வல்ல எம்மிறைவன் பாலகணபதியை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**செ.சதானந்தன் J.P**
***(ஓய்வுபெற்ற அதிபர்)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வாழும் வகை செய்த பெரியோன்"

01.12.2010 தனில் அகவை 71இல் கால்பதிக்கும் திரு.கணபதிப்பிள்ளை பாக்கியராசா அவர்களை அகமகிழ்வோடு இம்மலரினூடாக வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எல்லோராலும் மாலியண்ணா என்று அன்பாக அழைக்கப்படும் திரு.க.பாக்கியராசா அவர்களை மாணவப்பருவம் முதல் இற்றைவரை நன்கு அறிவேன். சராசரியாக ஒவ்வொரு மனிதனின் வாழ்வியல் நகர்வில் இளமைக்காலச் செயற்பாடுகள் மிகமுக்கியமானதாகக் கருதப்படுவது இயல்பு. இந்த வகையில் திரு க.பாக்கியராசா அவர்களின் செயற்பாடுகள் சமூகநலனை மையப்படுத்தி இருந்தமை கண்கூடு. சமூகப் பெறுமானங்களை எடுத்துக்காட்டாக வெளி உலகத்திற்குத் துலங்க வைப்பது அந்தச் சமூகத்தின் வளர்ச்சிப் பெறுமானங்களை வெளிப்படுத்தி நிற்பவை சனசமூகநிலையமும், ஆன்மீக வழிநின்று சமூகத்தை நல்வழிப்படுத்தும் களமாக விளங்கும் சமயத் தலங்களும் ஆகும்.

இந்த வகையில் அல்வாய் மனோகரா சன சமூகநிலையத்தின் பல்துறைசார் வளர்ச்சிக்கும் அதன் விருத்திக்கும் பங்காற்றியவர் திரு.க.பாக்கியராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். மனோகரா சனசமூக நிலையத்தின் ஓர் அங்கமான மனோகரா விளையாட்டுக் கழகத்தின் ஊடாக தனது உடல் சார் திறமைகளை வெளிப்படுத்தி அக்கழகத்தின் உதைபந்தாட்ட அணியின் சிறந்த வீரனாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து அணியின் சிறப்புக்குப் பெருமை சேர்த்தவர். இந்த வகையில் அவர் தான் சார்ந்த சமூகத்திற்கும் பெருமை சேர்த்தது சிறப்பம்சமாகும்.

தொடர்ந்து அல்வாய்ப் பிரதேசத்தில் சிறப்புற விளங்கும் ஆலயங்களில் ஒன்றான அல்வாய் சாமணந்தறை ஆலடி விநாயகர் தேவஸ்தானத்தின் வளர்ச்சியிலும், அதன் பல்பரிமாணத் திருப்பணித் தொண்டுகளிலும் தன்னை இணைத்து நின்று சமயப்பணியாற்றியவர். ஆலயத்தில் மிக நீண்டகாலமாக இறைவழிபாட்டோடு கூடிய ஓதுவாராகவும் திருத்தொண்டாற்றி வருபவர். இதுமாத்திரமல்லாமல் சூழவுள்ள பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில் நடைபெறுகின்ற ஆலயம் சார்ந்த விழாக்களில் கலந்து சிறப்பிக்கும் இயல்புடையவர். இதனூடாக அயல் சமூகங்களையும் நேசித்து அரவணைத்துப்போகின்ற மனங்கொண்டவர். என்றும் சைவப்பாரம்பரியத்தைப் பறைசாற்றி நிற்கும் ஆசார சீலராகக் காட்சிதருபவர்.

இதனோடு திரு க.பாக்கியராசா அவர்கள் கைதேர்ந்த கட்டடத்தொழில் வல்லுனராவார். அவர் நீண்டகாலமாக மேற்படி தொழிலைச் செய்துவருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரால் பலர் கட்டடத் தொழில் வல்லுனர்களாகத் திகழ்ந்துள்ளார்கள். அத்தகையோரின் எதிர்காலம் சிறக்கவும், உழைப்புச்சக்தி வளம் பெறவும் வழிகாட்டியாகத் திகழ்ந்து வருபவர். அவரால் சுற்றத்தவர், கட்டடத்தொழில் வல்லுனர்கள் பயிற்சியாளர்கள் என்போர் தங்களது குடும்பத்திற்கான வாழ்வாதார மேம்பாட்டினை எட்ட உதவியாக இருந்து வாழும்வகை செய்த பெருமைக்குரியவராவார்.

இத்தகைய பண்பினர் நல்ல மனிதநேயம் மிக்க சமூகப்பற்றாளன் சகல நலன்களுடன் குடும்பத்தினருடன் சுற்றம் சூழ பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

**கி. கணேசன்**
***(ஓய்வுபெற்ற அதிபர்)***
***பொதிகை***
***அல்லாய் வடக்கு.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டின்மூலம் நல்மனப்பாங்கை வளர்த்துக்கொண்ட பாய்க்கியராசா (மாலியண்ணை)

அறிவை வளர்க்க கல்வி உதவுவதுபோல நல்மனப்பாங்கை வளர்க்க விளையாட்டும் உதவுகின்றது. ஆகவேதான் பாடசாலைக் கல்வி முறையில் விளையாட்டையும் இணைப்பாட விதானத்தில் சேர்த்திருக்கிறார்கள். சில மாணவர்கள் பாடசாலைக் கல்வியினூடாக அறிவையும், விளையாட்டுத்திறனையும் வளர்த்துப் பாடசாலையி லிருந்து வெளியேறுவார்கள். சிலர் அறிவை மாத்திரம் வளர்த்துக் கொள்வார்கள், இன்னும் சிலர் விளையாட்டுத்திறன்களை மாத்திரம் வளர்த்துக் கொள்வார்கள். மாலியண்ணையும் விளையாட்டை மாத்திரம் கற்று பாடசாலைக் கல்வியிலிருந்து விலகிவிட்டார். அது துரதிஷ்டவசமானது.

மாலியண்ணை முதலாம் வகுப்புத் தொடக்கம் ஆறாம் வகுப்புவரை தேவரையாளி இந்துக் கல்லூரியிலும், ஏழாம் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்புவரை திருஇருதயக்கல்லூரியிலும், பத்தாம் வகுப்புத் தொடக்கம் பதினோராம் வகுப்புவரை மீண்டும் தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் கல்வி கற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஇருதயக்கல்லூரியில் கல்விகற்றுக் கொண்டிருந்த இவர் விளையாட்டிலும் ஆர்வத்தைக் காட்ட ஆரம்பித்தார். இவருடைய ஆர்வத்தையும், திறமையையும் கண்டறிந்த அப் பாடசாலைப் பயிற்றுனர் சவரிமுத்து ஆசிரியர் மாலியண்ணையை 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட உதைபந்தாட்ட அணியில் சேர்த்தார். இந்த அணியில் மாலியண்ணையைப்போல் பல சிறந்த வீரர்கள் இருந்தமையால் அந்த வருடத்தில் இந்த அணி வடமராட்சிச் சம்பியனாகிப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தது.

தேவரையாளி இந்துக்கல்லூரியில் கல்வியை மேற் கொண்டபோதுதான் மாலியண்ணை முறையான பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டார். இக்கல்லூரியின் உதைபந்தாட் அணியிலும் (17 வயதுக்கீழ்), கரப்பந்தாட்ட அணியிலும் இடம்பிடித்தார். அதே வேளை மேசைப்பந்தாட்டத்தையும் கற்றுக் கொண்டார். இவருடைய விளையாட்டுத் திறன்களை அவதானித்த இரத்தினசிங்கம் ஆசிரியரும், அண்ணாச்சாமி ஆசிரியரும் இவருக்குத் தொடர் பயிற்சி வழங்கியதை இன்றும் நன்றியுணர்வோடு கூறுவார். பாடசாலைக் காலத்திலேயே தன்னை ஒரு சிறந்த விளையாட்டு வீரனாகத் தேவரையாளி இந்துக் கல்லூரிதான் உயர்த்தி வைத்தது என்று கூறிக் கொள்வதில் அவருக்கொரு தனி மகிழ்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கல்வியை இடையில் முடித்துக் கொண்ட மாலியண்ணை நிறுவனப்பலம் வாய்ந்த அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார். அந்தக் காலத்திலேயே வரலாற்றுப் பலமும், வரலாற்றுப் பெறுமதியும் கொண்டிருந்த கழகம் அது. அக் கழகத்தில் விளையாட்டார்வ உறுப்பினர்களும், மானசீகமான ஒத்துழைப்பு வழங்கக்கூடிய உறுப்பினர்களும் இருந்தனர். மிகச்சிறந்த வீரர்களைக் கொண்ட உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட, துடுப்பாட் அணிகளை வழிநடத்திய, வழிநடத்திக் கொண்டிருக்கின்ற கழகம் அது. பாடசாலைக் காலங்களில் கற்றறிந்து கொள்ள முடியாத நுட்பங்களையும், யுக்திகளையும் மாலியண்ணை அக்கழகத்தினூடாகவே பெற்றுக் கொண்டார்.

ரசிகர்கள் வியந்து பாராட்டுமளவிற்கு விளையாட்டுத் திறன்களை தனது கழகத்தினூடாக வளர்த்துக் கொண்ட மாலியண்ணை காலப்போக்கில் வடமராட்சியில் சிறந்த உதைபந்தாட்ட வீரனாகத் திகழ்ந்தார். அழகாகவும், கவர்ச்சியாகவும், நெறிமுறை தவறாமலும் விளையாடுவதில் இவருக்கு நிகரானவர்கள் மிகச்சிலரே என்று கூறினால் மறுப்புத் தெரிவிக்க எவராலும் எந்தக் காரணத்தையும் முன்வைக்கமுடியாது. அங்க அசைவுகளாலும், முக பாவங்களாலும் தான் சொல்ல வந்த பரதரசத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம்

தனது, ஆடல் திறனால் ஆடல் நங்கை ஒருத்தி ஆடி ஆடி நடனத்தை அழகு படுத்துவதைப்போல மாலியண்ணையும் விளையாடி விளையாடி விளையாட்டை அழகுபடுத்துவார்.

இவர் விளையாட்டின் மூலம் பல உயர்ந்த பண்புகளையும் கற்றுக் கொண்டுள்ளார். அனைத்து மாற்றங்களுக்கும் வலுவான ஊடகம் எனக் கூறப்படும் அன்பு, சமத்துவத்துக்கான அடிப்படை எனக் கூறப்படும் செவி மடுக்கும் தன்மை, தனி மனித முரண்பாடுகளைக் களைய உதவும் சகிப்புத் தன்மை: தோல்வியடைந்தவர்களை உற்சாகப்படுத்துவதில் காட்டும் நாட்டம் இவரிடம் நிறைய உண்டு. இப் பண்புகளைக் கருவியாகப் பயன்படுத்தி ரசிகர்களைக் கவர்ந்தவர். விளையாட்டின் மூலம் மனித நேயப்பண்புகளை வளர்க்க முடியும் என்ற எண்ணமுள்ளவர்.

மாலியண்ணை விளையாட்டின் மூலம் பெற்ற அறிவையும், அனுபவத்தையும் அறிந்து கொள்ள அவரை நான் அணுகிய போது, அது ஒரு நேர்காணலாக பின்வருமாறு அமைந்து விட்டது.

கேள்வி:- பாடசாலைக்காகவும், உங்கள் கழகத்திற்காகவும், பிறகழகங்களிற்காகவும் விளையாடிய அனுபவம் உங்களிடம் நிறைய உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்காக விளையாடிய போது உங்களுக்கு அதிக மகிழ்ச்சியாக இருந்தது?

பதில்:- பாடசாலையையும், எனது கழகத்தையும், எனதன்பான ரசிகர்களையும் என்றைக்குமே நான் வேறுபடுத்திப் பார்க்க விரும்பியதில்லை. ஆகவே மூன்று சந்தர்ப்பங்களும் எனக்கு அதிக மகிழ்ச்சியைத்தான் தந்தன.

கேள்வி:- உங்களுடைய திறமைகளை இனங்கண்டு பொருத்தமான பயிற்சிகளை வழங்கிய பயிற்சியாளர்கள் யார்?

பதில்:- சவரிமுத்து (PTI திருஇருதயக் கல்லூரி), இரத்தினசிங்கம் ( PTI தேவரையாளி இந்துக்கல்லூரி), அண்ணாச்சாமி (ஆசிரியர், தேவரையாளி இந்துக்கல்லூரி)

கேள்வி:- உங்களுடைய காலத்தில் விளையாடிய உதைபந்தாட்ட வீரர்களில் உங்களால் மறக்க முடியாதவர்கள் யாரும் இருந்தால் கூறுங்கள்?

பதில்:- சாம்பசிவம்(மனோகரா), கந்தவனம்(மனோகரா), இரத்தினராசா(மனோகரா), இரத்தினசிங்கம்(டயமன்ஸ்), தர்மஸ்ரீராஜா(பொமேஸ்), நேசதுரை(உடுப்பிட்டி யூனியன்), அருணாசலம்(வல்வை புளூஸ்), மயிலேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியம்

பெருமாள்(வல்வை புளுஸ்), ஜேதிரவி(N.C.C)

கேள்வி:- மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றிய வர்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள் யாராவது?

பதில்:- கமலநாதன், தனபாலசிங்கம் இருவரையும் குறிப்பிடலாம். இலகுவில் மறந்துவிட முடியாதவர்கள். இவர்களின் விசிலில் கம்பீரமும், மிடுக்கும், ஆளுமையும் நிறைய இருந்தன.

கேள்வி:- நீங்கள் பார்த்து ரசித்த அல்லது விளையாடி அனுபவித்த உதைபந்தாட்டப் போட்டிகள் பற்றிச் கூறுங்கள்?

பதில்:- அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் வருடாவருடம் சித்திரா பூரணை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடாத்தி வந்தது. ஒரு வருடம் வதிரி டயமன்ஸ், வதிரி பொமேஸ் அணிகள் இறுதிப் போட்டியில் மோதின. அடுத்த வருடம் அல்வாய் மனோகரா, வல்வெட்டித்துறை புளுஸ் அணிகள் இறுதிப் போட்டியில் மோதின. இந்தப்போட்டியில் நானும் மனோகரா அணிக்காக விளையாடினேன். முதலில் குறிப்பிட்ட போட்டியைப்பார்த்து ரசித்தேன். அடுத்த போட்டியை அனுபவித்து விளையாடினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி:- விளையாட்டின் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட நற்பண்புகள் எவை?

பதில்:- சகிப்புத்தன்மை, கீழ்ப்படிவு, கூட்டுறவு, பெரியவர்களை மதித்தல். ஒற்றுமை

கேள்வி:- உதைபந்தாட்ட வளர்ச்சிக்காகத் தற்பொழுது மேற்கொள்ளப்படும் முயற்சிகள் திருப்தி அளிப்பனவையாக இருக்கின்றதா?

பதில்:- ஆம் பாடசாலைகளும் விளையாட்டுக் கழகங்களும் தனித்தனியாகப் பயிற்சிகளையும், சுற்றுப் போட்டிகளையும் நடத்துகின்றன. பிரதேச செயலகங்கள், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியனவும் உதைபந்தாட்ட வளர்ச்சிக்காக உழைக்கின்றன.

கேள்வி:- இவ் விசேட சந்தர்ப்பத்தில் நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

பதில்:- ஆம் சாமணந்தறை ஆலடியான் தந்த பெருமைதான் இவை எல்லாம். "யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே" என்று கூறிய திருமூலரை நினைக்கின்றேன். பெற்றோரை, சகோதரங்களை, மைத்துனர்களை, உறவினர்களை, பாடசாலையை, ஆசிரியர்களை, விளையாட்டுப் பயிற்சியாளர்களை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசிகர்களை, சக விளையாட்டு வீரர்களை நன்றியுணர்வோடு மனம் நிறைய நினைத்துப் பார்க்கிறேன். மகிழ்ச்சியாக இருக்கிறது.

இந்த நேர்காணலிலிருந்து மாலியண்ணையின் பரந்த மனப்பான்மையும் நன்றி மறவாத் தன்மையும் மிகத் தெளிவாகப் புலப்படுகின்றன. நல் மனப்பாங்கை வளர்க்க அவர் படித்த பாடசாலைகளும், விளையாட்டுக் கழகங்களும், உறவினர்களும் காரணமாக இருந்திருக்கலாம்.

மடத்துக்கடவை, அல்வாய் மேற்கில் பிறந்த திரு கணபதிப்பிள்ளை பாய்க்கியராசா அவர்கள் (மாலியண்ணை) இன்னும் வளர, வாழ ஆலடியானும், பூவற்கரையானும் துணைபுரிய வேண்டுகின்றேன்.

இந்த நல் மனிதனை, சிறந்த விளையாட்டு வீரனைப் பற்றிச் சில வார்த்தைகள் எழுதுவதற்காகச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த அமைப்புக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

***சீ.சாந்தநாதன்***
***வதிரி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்"

என்னும் தெய்வப் புலவர் திருவள்ளுவரது கூற்றுக்கமைவாக வாழ்ந்து, வாழுகின்ற எனது அன்புக்கும் பாசத்துக்குமுரிய திரு.கணபதிப்பிள்ளை பாக்கியராசா அண்ணை (மாமா) அவர்களின் 70வது அகவை பூர்த்தி விழாவை முன்னிட்டு விழா மலரொன்றினை வெளியீடு செய்வதற்கு அரும்பணியாற்றிய அல்வாயூர் கவிஞர் நாடக மன்றத்தினருக்கும், ஆசியுரை, வாழ்த்துரைகள், பாராட்டுரைகள், கட்டுரைகள், கவிதைகள் வழங்கிச் சிறப்பித்த அன்பர்களுக்கும் இம்மலரினைத் தொகுத்து வழங்கிய திரு.செ.சதானந்தன் J.P, பதிப்பித்த மதுரன் கிறா(f)பிக்ஸ் & ஒவ்செற் பிறின்ரேர்ஸ் உரிமையாளர் திரு.சு.மகேஸ்வரன் அவர்களுக்கும் இவ்விழாவினை நடாத்துவதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது அன்பான நன்றியினை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சதாசிவம் ஈஸ்வரன் (சுவிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Mathuran Graphics & Offset Printers, T.P.No:- 021 226 3099, 0776698318 Mail - mathuran printers @ gmail.com.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org